வரையில் நம்முடைய மாநிலம் மிக நல்ல வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஏன் என்றால் தன்னிறைவுத் திட்டத்தில ஏராளமான சப்-சென்டர்கள் நமக்கு கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியாவுக்காக நிர்ணயித்துள்ள இலக்கு 2 ஆயிரம், மற்ற மாநிலங்கள் எல்லாம் எடுத்துக்கொள்கிறார்களோ இல்லையோ நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இன்னும் 2 ஆண்டுக்குள் நாம் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திற்கு ஒரு சென்டர் என்ற முறையை மாற்றி மலைப் பகுதிகளுக்கு அந்த எண்ணிக்கையை சற்றுக் குறைத்து அதற்கு என்று ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது Hill Area Development Programme என்று, மலைப் பகுதிகளுக்கு என்று தனியாக ஒரு ப்ரோகிராம் வைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே குலக்கொம்பு என்ற இடத்தில் நாம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 282 மற்றும் 283 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

தமிழக நீர்மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் வாரியம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 296—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Prevention of Water Pollution Board அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழு என்ன நடவடிக்கைகள் இதுவரை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ''(அ) தமிழக நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம்'' (Prevention of Water Pollution Board) 19–2–1982இல் அமைக்கப்பட்டு 27–2–1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) விவர அறிக்கை @அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@488—489ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.